**நிகழும் திருவள்ளுவராண்டு விகாரி வருடம் 2019-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ம் தேதி மார்கழி மாதம் 2-ம் தேதி புதன்கிழமை காலை 11:00 மணிக்கு நடைபெற்ற வால்பாறை நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

பொருள் : 1

இந்நகராட்சி 217.87 ச.கி.மீ பரப்பளவு கொண்ட 21 வார்டுகள் உள்ளடக்கிய மலைப்பிரதேச பகுதிகளாகும். மேற்படி வார்டு பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகள் நேராய்வு செய்வதற்கும், பருவக்காலங்களில் இயற்கை சீற்றங்களால் ஏற்படும் இடர்பாடுகளை பார்வையிடவேண்டியுள்ளதாலும், மேலும் வால்பாறை டவுன் பகுதிகளை தவிர அட்டகட்டி, காடம்பாறை மின் நிலையம், நீரார் டேம், சோலையார் டேம் மற்றும் பாலகிணறு செட்டில்மெண்ட் ஆகிய ஒவ்வொரு வார்டு பகுதிகளும் சுமார் அதிகபட்சம் 35 கி.மீட்டர் தொலைவிற்கும் மேல் அமைந்துள்ளதால் சம்பந்தப்பட்ட இடங்களை நேராய்வு செய்வதற்கும், அலுவலக பணிகள் சம்பந்தமாக உயர் அலுவலகங்களில் நடைபெறும் கூட்டங்களுக்கும் மற்றும் கோவை மாவட்ட ஆட்சியர் அவர்களின் அலுவலகத்தில் நடைபெறும் கூட்டங்களுக்கும் சென்று வரவும் இந்நகராட்சியில் நாளதுவரை TN 41 Q 5751 என்ற ஈப்பு வாகனம் பயன்படுத்தப்பட்டு வந்தது, இவ்வாகனம் 2006 ஆம் ஆண்டில் வநியோகம் பெறப்பட்டு 13 ஆண்டுகளுக்கு மேலாகியும் சுமார் 4,19,000 கிமீ-க்கு மேல் ஓடியுள்ளதால் தற்போது இவ்வாகனம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் மேற்படி அலுவலக சம்பந்தப்பட்ட பணிகளுக்கு ஆணையாளர் அவர்கள் பயன்படுத்த வாகனம் இல்லாத காரணத்தால் அவசர அவசியம் கருதி மேற்காணும் ஈப்பு வாகனத்தினை கழிவுக்கு உட்படுத்தி அதற்கு பதிலாக புதியதாக **MAHINDRA SCORPIO WHITE S11 MODEL** என்ற வாகனத்தினை அலுவலக பயன்பாட்டிற்காக விநியோகம் பெறும் பொருட்டு கீழ்கண்ட நிபந்தணைகளுக்கு உட்பட்டு வாகனம் வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>நிபந்தனைகள் :-</u>

1. வங்கியில் நகராட்சி வைப்பு தொகையில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகையிலிருந்து வாகனம் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
2. CSR / Sponsor நிதி பெற்று அந்த நிதியின் கீழ் வாங்கலாம்.
3. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று வாங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் அனுமதி கிடைக்காத பட்சத்தில் Sponsor நிதியின் கீழ் பெற்றிருந்தால் வாகனத்தினை திரும்ப ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

எனவே மேற்படி வாகனம் விநியோகம் பெறுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.16.66 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

*அலுவலக குறிப்பு:-*

அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 515 மன்றம் அங்கீகரிக்கப்படுகிறது.**